**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

**PW 5- OS. No. 38/2017**

2023ம் ஆண்டு மார்ச் மாதம் 20ம் நாள் வாக்குமூலம் 1969ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி சத்திய பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : திரு.முருகபூபதி | தொழில் : |
| த/பெ. : திரு, பாலசுப்பிரமணியன் | வயது : 68 |
| முகவரி : | |

**அழைப்பாணையின் பேரில் வாதி தரப்பில் சாட்சி வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் 3ம் தரப்பினர். இத்ந வழக்கில் சாட்சியம் அளிக்க நீதிமன்றதிலிருந்து அழைப்பாணை வந்தது. அழைப்பாணை ஆனது General Seceratory க்கு வந்தது. இந்த வழக்கில் சாட்சியம் அளிக்கவும் ஆவணங்கள் தாக்கல் செய்யவும் எனக்கு அவர் எனக்கு அனுமதி கடிதம் அளித்துள்ளார். நான் திருப்பூர் டையர்ஸ் அசோசியெசனில் தலைமை செயல் அலுவலராக பணிபுரிகிறேன். அனுமதி கடிதம் வாதி தரப்பில் Ex X4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அழைப்பாணையில் கடந்த 2011 2014 ஆண்டுக்கான டையர்ஸ் அசோசியெசனில் நிர்வாக குழுக்கான தேர்தலில் என்ன பதவிக்கு யார் யார் போட்டியிட்டார்கள் என்பது குறித்த விவரம் தாக்கல் செய்ய உத்தரவு விடப்பட்டு இருந்தது. வேட்பாளர் பெற்ற வாக்குகளின் விவரமும் வாக்களித்த நபர்களின் வாக்காளர் பதிவேடும் தாக்கல் செய்ய உத்தரவுவிடப்பட்டுயிருந்தது. உறுப்பினர்களின் பட்டியல் தாக்கல் செய்கிறேன். அது வாதி தரப்பில் Ex X5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி பட்டியலில் வரிசை எண் 221ல் பிரின்ஸ் டையிங் நிறுவனமானது உள்ளது. 2011 2014ல் நாங்கள் வாடகை கட்டிடத்தில் இருந்தோம். அங்கு இருந்து அசோசியசேனில் மாற்றம் செய்ததாலும் 10 வருடங்களுக்கு மேல் ஆனதாலும் தேர்தல் நடந்த தொடர்பான ஆவணங்களை அளித்து விட்டோம். மேற்படி ஆவணங்கள் தற்போது கைவசம் இல்லை. வாக்களித்தவர் பட்டியல் தாக்கல் செய்யப்பட்டு இருந்தால் அதில் யார் யார் வாக்களித்தார்கள் என்ற விவரம் தெரியவந்து இருக்கும். மேற்படி பட்டியல் இல்லை என்பதால் தாக்கல் செய்ய முடியவில்லை. எனது தரப்பு சாட்சியினை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டு கொள்கிறேன்.

**1–5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

1. ஆவணங்களை அளித்ததற்கான எங்களது அசோசியெசனில் பதிவேடு ஏதவாது பராமரிக்கப்படுகிறதா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள ஆவணத்தை வைத்து பிரின்ஸ் டையிங் நிறுவனம் கூட்டாண்மை நிறுவனமா அல்லது தனிநபர் நிறுவனமா என சொல்லமுடியாது என்றால் ஆமாம். எங்களது அசோசியெசனில் உறுப்பினராக சேர்வதற்கு விண்ணப்பம் பெறப்படுகிறதா என்றால் தற்போது பெறப்படுகிறது. நான் பணியில் சேர்ந்து 8 வருடம் ஆகிறது. எனக்கு முன் பணியில் இருந்த நபரை கேட்டபோது அவ்வாறு விண்ணப்பம் பெறப்பட்டதா இல்லையா என்பது தெரியவில்லை என தெரிவித்தார். நான் தாக்கல் செய்துள்ள ஆவணத்தை வைத்து பிரின்ஸ் டையிங் நிறுவனத்திற்காக யார் வாக்களித்தார்கள் என்பதை சொல்ல முடியாது என்றால் ஆமாம்.

**7ம் பிரதிவாதி தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்படுகிறது என தெரிவிக்கப்பட்டது.**

சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

M MEKALA MYTHILI

Digitally signed by M MEKALA MYTHILI
Date: 2023.03.20 19:07:02 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.